மனதை உலுக்கிய கிரைம் 17



பேச மறுத்த பேஸ்புக் காதலி; 2 பேரை வெட்டிக் கொன்ற காதலன்

செலவு செய்த ரூ.1½ லட்சத்தை திருப்பி கேட்டு கொடூர தாக்குதல்

இன்றைய இளம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் சமூக ஊடகங்களில் பெரும்பாலான நேரங்களை செலவழித்து அதிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். முகநூல், இன்ஸ்டாகிராம், ஸ்னாப் ஷாட், உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாக முகம் தெரியாத நபர்களோடு அறிமுகமாகி மணிக்கணக்கில் அரட்டை அடிப்பதை இளம்பெண்கள் பலர் வாடிக்கையாகவே கொண்டிருக்கிறார்கள்.

நம்மோடு தொலைபேசியில் உரையாடும் நபர் எப்படிப்பட்டவர்? என்பது தெரியாமலேயே அவர்கள் பேசுவதற்கெல்லாம் தலையாட்டிவிட்டு கூப்பிடும் இடங்களுக்கும் செல்வது என்பது இன்றைக்கு சர்வ சாதாரணம் ஆகிவிட்டது.

இதுபோன்று முகநூல் காதலர்களோடு வெளியில் செல்லும் பெண்களின் காதல் கடைசி வரை நீடிக்காத நிலையில் அவர்கள் பல்வேறு இன்னல்களையும் சந்திக்க நேரிடுகிறது. இனம் புரியாத வயதில் ஏற்படும் காதலுக்கு எந்த எதிர்பார்ப்புகளும் இருக்காது. ஆனால் விபரம் தெரிந்த பிறகு இந்த காதலால் எதிர்காலத்தில் நமது வாழ்க்கை எப்படி இருக்கும்? இது நமது வாழ்க்கைக்கு சரிப்பட்டு வருமா? என்றெல்லாம் பெண்கள் சிந்திக்க தொடங்குவார்கள்.

அப்படி வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை வரும் போது தான் சில நேரங்களில் நாம் செய்து கொண்டிருக்கும் காதல் பிற்காலத்தில் நமக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்திவிடுமோ என்கிற அச்சம் பெண்களை தொற்றிக் கொள்ளும்.

இதன் காரணமாக அவர்கள் இந்த காதல் நமக்கு சரிப்பட்டு வராது என நினைத்து வேறொரு பாதையை தேர்ந்தெடுப்பார்கள்.

அப்போதுதான் காதல் கசக்கத் தொடங்கும். உருகி உருகி காதலித்த காதலனிடமிருந்து எப்படி விலகுவது என்று திட்டம் போட்டு செயல்பட தொடங்குவார்கள்..அதுவே அவர்களுக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்தி விடுவதும் உண்டு.

இது போன்று சமூக ஊடகங்கள் மூலமாக மலரும் காதல் பல நேரங்களில் திருமணம் வரை செல்வதில்லை. இடையிலேயே அந்த காதல் தோல்வியில் முடிந்து விடுகிறது. இனம் புரியாத பருவத்தில் ஏற்படும் காதல் பல நேரங்களில் கல்யாணத்தில் முடியாமல் காணாமலேயே போய் விடுவது உண்டு. இதனால் இளைஞர்கள் பலர் தாங்கள் உருகி உருகி காதலித்த பெண்ணை மறக்க முடியாமல் திசை மாறி சென்ற சம்பவங்களும் அரங்கேறி இருக்கின்றன. குறிப்பாக தனக்கு கிடைக்காத பெண் வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது என்கிற எண்ணத்தில் காதலித்து ஏமாற்றிய பெண்ணின் முகத்தில் ஆசிட் வீசுவது, சரமாரியாக வெட்டுவது போன்ற சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

அந்த வரிசையில் திருவாரூர் மாவட்டத்தில் முகநூலில் பழகி காதலித்து விட்டு பின்னர் கண்டுகொள்ளாமல் சென்ற காதலியின் வீடு தேடிச்சென்று தான் இதுவரை செலவழித்த பணத்தை காதலன் திருப்பிக் கேட்டதால் ஏற்பட்ட மோதல் இரட்டைக் கொலையில் முடிந்துள்ளது.

பரபரப்பான இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–

திருவாரூர் மாவட்டம், பாண்டுகுடி பகுதியை சேர்ந்தவர் முகமது ஆதம். 23 வயதான இவர் வேன் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். தனது பள்ளி பருவத்தில் 11–ம் வகுப்பு படித்தபோது திருவாரூர் புலிவலம் காந்தி நகர் பகுதியை சேர்ந்த 10–ம் வகுப்பு படிக்கும் மாணவியுடன் இவருக்கு முகநூல் மூலமாக நட்பு ஏற்பட்டுள்ளது. இது பின்னர் காதலாக மாறி, இருவரும் ஒருவரை யொருவர் உருகி உருகி காதலித்தனர்.

இந்த காதல் ஜோடி பல இடங்களுக்கும் ஒன்றாகச் சென்று காதலை வளர்த்து உள்ளது. இந்த நிலையில் முகமது ஆதமும் அந்த மாணவியும் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு அவரவர் வீடுகளுக்கு சென்றனர்.

முகமது ஆதம் டிரைவராக பணிபுரிந்து வரும் நிலையில் 22 வயதான அவரது காதலி பிசியோ தெரபிஸ்டு முடித்து விட்டு அது தொடர்பான வேலையில் இருந்து வருகிறார்.

பிசியோதெரபிஸ்ட்டாக இருக்கும் நமக்கு டிரைவர் வேலையில் இருப்பவர் கணவனாக அமைந்தால் அது சரிப்பட்டு வருமா? என்கிற கேள்வி முகமது ஆதமின் காதலிக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக அவர் முகமது ஆதமுடன் பேசுவதையும் பழகுவதையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துள்ளார். ஒரு கட்டத்தில் பேசுவதை முற்றிலுமாகவே தவிர்த்து உள்ளார்.

இதைத்தொடர்ந்து காதலியை பார்க்க முடியாமலும் பேச முடியாமலும் தவித்த முகமது ஆதம் எப்படியாவது அவரது மனதை மாற்றி எப்போதும் போல பேச வைத்து விடவேண்டும் என்கிற முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை. இதற்கிடையே முகமது ஆதமின் குடும்பத்தினர் திருவாரூரில் இருந்து தென்காசிக்கு குடி பெயர்ந்தனர். அவர்களோடு முகமது ஆதமும் நமது மூட்டை முடிச்சுகளை எல்லாம் கட்டிக்கொண்டு தென்காசிக்கு சென்று விட்டார். ஊரு விட்டு ஊரு சென்ற நிலையிலும் முகமது ஆதமால் தனது காதலியை மறக்க முடியவில்லை. எப்படியாவது காதலியின் மனதை மாற்றி விடலாம் என்ற நம்பிக்கையுடனும் , கனவுகளுடனும் காலத்தை கடத்தினார்.

ஆனால் காதலியோ, முகமது ஆதமை கண்டுகொள்ளவே இல்லை. அவருடன் பேசுவதை முழுமையாக தவிர்த்துள்ளார். இது முகமது ஆதமுக்கு கடும் மன உளைச்சலை ஏற்படுத்தியது. தினமும் காதல் நினைவுகளை அசை போட்டபடியே காலத்தை தள்ளிய முகமது ஆதம் காதலியை மறக்க முடியாமல் சோகத்தில் மூழ்கியபடியே காணப்பட்டார்.

காதலிக்கும் போது இருவரும் வெளியில் ஒன்றாக ஊர் சுற்றிய போது முகமது ஆதம் பணத்தை வாரி வாரி வீசி செலவழித்து உள்ளார். சுமார் ரூ.1½ லட்சம் வரையில் காதலிக்காக செலவு செய்துள்ளோம். ஆனால் அவள் நம்மை விட்டு விலகிச் சென்று வேறு ஒருவருடன் வாழ போகிறாரே என்கிற எண்ணம் முகமது ஆதமின் மனதில் வந்து சென்றது.

இதைத் தொடர்ந்து வேதனையின் உச்சிக்கே சென்ற முகமது ஆதம் 'நாம் காதலித்த போது செலவழித்த சுமார் ரூ.1½ லட்சத்தை திருப்பி கொடுத்து விடு' என காதலியின் செல்போனுக்கு குறுந்தகவல் ஒன்றை அனுப்பி உள்ளார். இதனை படித்த அந்த பெண்ணுக்கு தூக்கி வாரி போட்டுள்ளது. 'பிரேக் அப்' என்ற வார்த்தையுடன் அனைத்தும் முடிந்து விடும் என நினைத்தால், இப்போது புதிதாக பிரச்சினை முளைக்கிறதே என்று எண்ணிய இளம்பெண் முகமது ஆதமின் செல்போன் நம்பரை பிளாக் செய்துள்ளார்.

இதனால் முகமது ஆதம் இனியும் பொறுக்க முடியாது என பொங்கி எழுந்தார். காதலிக்காக செலவு செய்த பணத்தை மொத்தமாக வாங்கி விட வேண்டும் என்கிற எண்ணத்தில் தென்காசியில் இருந்து முகமது ஆதம் திருவாரூருக்கு புறப்பட்டார். முகமது ஆதமுடன், அவரது நண்பர்களான பாண்டுகுடி முகமது ரசூல்தீன், தென்காசி ஹாஜ் முகம்மது ஆகிய 3 பேரும் சென்றனர். திருவாரூர் மாவட்டத்தில் புலிவலத்தில் உள்ள அந்த பெண்ணின் வீட்டிற்கு சென்று தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

பள்ளி பருவத்தில் இருந்து காதலித்து விட்டு, தற்போது என்னிடம் பேசாமல் ஒதுக்குகிறாயே நான் என்ன தவறு செய்தேன்? நம் காதல் ஜெயிக்க வேண்டும் நீ இல்லாத வாழ்வை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது என சினிமா ஹீரோ போல காதல் வசனங்களை முகமது ஆதம் அள்ளி வீசியிருக்கிறார். ஆனால், காதலியோ அதைப் பற்றி எல்லாம் துளியும் கவலைப்படவில்லை.

> **“ பள்ளி பருவத்தில் இருந்து காதலித்து விட்டு, தற்போது என்னிடம் பேசாமல் ஒதுக்குகிறாயே நான் என்ன தவறு செய்தேன்? நம் காதல் ஜெயிக்க வேண்டும். நீ இல்லாத வாழ்வை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது என சினிமா ஹீரோ போல காதல் வசனங்களை முகமது ஆதம் அள்ளி வீசியிருக்கிறார். ஆனால், காதலியோ அதைப் பற்றி எல்லாம் துளியும் கவலைப்படவில்லை. ”**

நீ கேட்பது மாதிரி பணத்தை எல்லாம் தர முடியாது. உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள் என்று ஆதங்கப்பட்டுள்ளார். அப்போது வீட்டில் இருந்த காதலியின் அண்ணன் கோபிகிருஷ்ணனுக்கும் முகமது ஆதம், தரப்பினருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதை தொடர்ந்து கோபி கிருஷ்ணன் தனது நண்பர்களை உதவிக்கு அழைத்தார். இதைத் தொடர்ந்து அவரது நண்பர்களான தர்மா, சந்தோஷ்குமார், தட்சிணாமூர்த்தி ஆகியோர் அங்கு வந்துள்ளனர். இதன் பிறகு வாக்குவாதம் முற்றி அது மிகப் பெரிய மோதலாக வெடித்தது.

காதலியின் அண்ணன் கோகுல கிருஷ்ணனும் அவருடன் இருந்தவர்களும் முகமது ஆதமை மேலும் ஆத்திரப்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளனர் இதை தொடர்ந்து முகமது ஆதம் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காதல் விவகாரத்தில் பஞ்சாயத்து பேசுவதற்காக வந்த சந்தோஷ்குமார் மற்றும் தட்சிணாமூர்த்தி ஆகியோரை சரமாரியாக கத்தியால் குத்தினார். இதில் இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருவாரூர் தாலுகா போலீசார் காதலன் முகமது ஆதம் மற்றும் அவரது நண்பர்கள்முகமது ரசூல்தீன், ஹாஜ் முகம்மது ஆகியோரை மடக்கிப்பிடித்து கைது செய்தனர்.

காதல் விவகாரத்தில் நண்பனின் தங்கைக்காக பேசச் சென்ற இரண்டு பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் திருவாரூர் மாவட்டத்தில் கடும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. அறியாத பருவத்தில் வரும் காதலுக்கு எப்போதுமே ஆயுசு கம்மி என்பார்கள். அந்த வரிசையில் முகமது ஆதமின் காதலும் சேர்ந்து இருக்கிறது.

இந்தியாவின் குற்றச்சாட்டுக்கு பதில்:

ரஷியாவிடம் யுரேனியத்தை அமெரிக்கா வாங்குவது பற்றி எனக்கு தெரியாது

அதிபர் டிரம்ப் சொல்கிறார்

வாஷிங்டன், ஆக. 6–

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் சமீபத்தில் அறிவித்தார்.

மேலும் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணையை வாங்குவதால் இந்தியா மீது கூடுதல் அபராதமும் விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். ரஷியாவிடம் எண்ணை வாங்கி வர்த்தகம் செய்வதால் உக்ரைனுக்கு எதிரான போரில் இந்தியா மறைமுகமாக உதவுகிறது என்று டிரம்ப் குற்றம் சாட்டினார்.

இந்தியா பதிலடி

இவ்விவகாரத்தில் டிரம்புக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் பதிலடி கொடுத்தது. அதில் ரஷியாவிடம் கச்சா எண்ணை வாங்கும் விவகாரத்தில் இந்தியாவை கண்டிக்கும் நாடுகளே ரஷியாவுடன் தொடர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அணுஆயுத தொழிற் சாலைக்காக யுரேனியம், மின்வாகன உற்பத்திக்காக பல்லேடியம் ஆகியவற்றை ரஷியாவில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்து வருகிறது. எரிசக்தி, ரசாயனம், உரங்கள், இரும்பு மற்றும் எக்கு, எந்திரங்கள், போக்குவரத்து சாதனங்கள் என பல்வேறு துறைகளில் ரஷியாவுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. இதில் இந்தியாவை குறி வைப்பது நியாயமற்றது என்று டிரம்ப் குற்றம் சாட்டினார்.

யுரேனியம்

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் டிரம்ப், வெள்ளை மாளிகையில் பேட்டி அளித்தபோது, ரஷியாவிடம் அமெரிக்கா யுரேனியத்தை வாங்குகிறது என்று இந்தியா தெரிவித்தது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு டிரம்ப் பதிலளித்தபோது, ரஷியாவில் இருந்து யுரேனியம் மற்றும் உரங்களை அமெரிக்கா இறக்குமதி செய்வது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் அதை சரிபார்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

வாங்க கூடாது

இதற்கிடையே குடியரசு கட்சியை சேர்ந்தவரும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான நிக்கி ஹாலே கூறும்போது, இந்தியா போன்ற வலுவான நட்பு நாடுடன் அமெரிக்காவின் உறவை எரித்து சீனா பயன் அடைய அனுமதி வழங்கக்கூடாது. இந்தியா ரஷியாவில் இருந்து எண்ணை வாங்கக்கூடாது.

ஆனால் ரஷியா மற்றும் ஈரானிடம் எண்ணையை முதன்மையாக வாங்கும் சீனாவுக்கு வரி விதிப்பை 90 நாட்கள் டிரம்ப் நிறுத்தி உள்ளார். எனவே இந்தியாவுடன் நட்புறவை எரித்து விடாதீர்கள் என்றார். இந்தியாவுடன் மோதல் விவகாரத்தில் டிரம்புக்கு அவரது சொந்த கட்சியிலேயே எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

மோதல்

இந்த நிலையில் பிரேசில் இறக்குமதிகள் மீது 50 சத வீத வரியை டிரம்ப் விதித்த தால் அமெரிக்கா – பிரேசில் இடையே மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரேசில் அதிபர் லுலா டா சில்வா கூறியதாவது:–

அழைக்க மாட்டேன்

நான் அமெரிக்க அதிபர் டிரம்புடன் பேசுவதற்கு எந்த முன்முயற்சியும் எடுக்க மாட்டேன். அவரை பேச்சுவார்த்தை நடத்த அழைக்கப் போவதில்லை. ஏனென்றால் அவர் பேச விரும்பவில்லை. இந்திய பிரதமர் மோடி மற்றும் பிற நாட்டு தலைவர்களுடன் பேசுவேன். நான் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை அழைப்பேன். ரஷிய அதிபர் புதினால் இப்போது பயணம் செய்ய முடியாததால் நான் அவரை அழைக்க மாட்டேன். ஆனால் நான் பல அதிபர்களுடன் பேசு வேன். இந்தியா, சீனாவுடன் உறவை வலுப்படுத்துவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதிக வரி விதிப்பதாக மிரட்டல்:

இந்தியா மீது 100 சதவீத வரி விதிப்பா?

டிரம்ப் பதில்

இந்தியாவுடன் மோதல் விவகாரத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப் நேற்று புதிய மிரட்டலை விடுத்தார். அவர் கூறும்போது, இந்தியா நல்ல வர்த்தக கூட்டாளி அல்ல. மற்ற நாடுகளை விட அதிக மான வரி விதிக்கிறது.

இந்தியா மீது 25 சதவீத வரி விதிக்கப்பட்ட நிலை யில் அடுத்த 24 மணி நேரத் தில் இந்தியா மீதான வரியை மிக அதிக அளவில் உயர்த்த லாம் என்று நினைக்கிறேன் என்றார்.

இந்த நிலையில் டிரம்ப் பேட்டி அளித்தபோது, ரஷியாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 100 சதவீத வரி விதிக்கப்படும் என்று நிருபர்கள் கேள்வி கேட்டனர்.

அதற்கு பதிலளித்த டிரம்ப், நான் ஒருபோதும் ஒரு சதவீதத்தை சொல்ல வில்லை. ஆனால் நாங்கள் நிறைய வரியை விதிப்போம்.. அடுத்த மிகக் குறுகிய காலத்தில் என்ன நடக்கும் நாளை ரஷியாவுடன் ஒரு பேச்சுவார்த்தை நடக்க உள்ளது. அதில் என்ன நடக் கிறது என்று பார்ப்போம் என்றார்.

முன்னதாக ரஷியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கு 100 சதவீத வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் தெரிவித்து இருந் தார் என்பது குறிப்பிடத் தக்கது.

வளர்ச்சி விகிதம் 11.19 சதவீதமாக உயர்ந்து சாதனை

இந்தியாவிலேயே தமிழக அரசு மட்டுமே இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஆக. 6–

தமிழ்நாடு – இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டி உள்ளது குறித்து முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறி இருப்பதாவது:–

இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிக் காட்டியுள்ள ஒரே அரசு தமிழ் நாட்டின் திராவிட மாடல் அரசு. இந்தியாவிலேயே அதிகபட்சமாக 9.69 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடம் என்று கூறி வந்தோம் அல்லவா. அதையும் தாண்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19 சதவீதம் என ஒன்றிய அரசின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்பு, இரட்டை இலக்க வளர்ச்சி எட்டப் பட்டது. 2010–11–ம் ஆண்டில். அப்போது கலைஞர் ஆட்சி. இப்போது கலைஞர் வழி நடக்கும் திராவிட மாடல் ஆட்சி! இரண்டுமே கழக ஆட்சி. 2030–ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற போது பலரது புருவமும் உயர்ந்தது. "இது மிக உயர்ந்த இலக்கு, எப்படி சாத்திய மாகும்?" என்றார்கள்! இதே வேகத்தில் சென்றால், எதுவும் சாத்தியம் என்பது இப்போது மெய்ப்பிக் கப்பட்டுவிட்டது. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் (குறள் 666)

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் பெ.சண்முகம் சந்தித்து பேசினார்கள். அருகில் துணை முதல்–அமைச்சர் உதயநிதி, அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், எ.வ.வேலு உள்ளனர்.

சாதி ஆணவ படுகொலையை தடுக்க தனி சட்டம் இயற்ற வேண்டும்

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் திருமாவளவன், முத்தரசன், சண்முகம் நேரில் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 6–

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் உடல்நலக் குறைவு காரணமாக சமீபத்தில் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார்.

சில நாட்கள் தங்கி சிகிச்சை பெற்ற அவர் பின்னர் வீடு திரும்பினார். சில நாட்கள் ஓய்வில் இருந்த அவர் பின்னர் தனது வழக்க மான பணிகளை தொடங்கினார். தற்போது அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சி களில் பங்கேற்று வருகிறார்.

இந்த நிலையில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை அரசியல் கட்சி தலைவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து உடல் நலம் விசா ரித்து வருகிறார்கள்.

ஏற்கனவே முன்னாள் முதல்–அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரே மலதா, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து உடல் நலம் விசாரித்தனர். இந்த நிலையில் இன்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை, சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஆகியோர் சந்தித்த னர். திருமாவளவனுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சி துணை பொதுச் செயலாளர் வன்னியரசும் சென்றிருந்தார்.

இந்த சந்திப்பின் போது துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

முத்தரசன், சண்முகம், திருமாவளவன் ஆகிய 3 பேரும் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த போது அவரது உடல்நலம் பற்றி விசாரித்தனர். பின்னர் தாங்கள் கொண்டு வந்திருந்த கோரிக்கை மனுக்களையும் அளித்தனர்.

முதல்–அமைச்சரை சந்தித்த பிறகு திருமாவ ளவன், முத்தரசன், சண்முகம் ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம் கூறியதாவது:–

சமீபத்தில் நெல்லையில் நடைபெற்ற ஆணவ படுகொலை, அதையொட்டி தமிழ்நாடு முழுவதும் சாதி ஆணவ கொலைகள் சம்பந்தமாக ஒரு விவாதம் நடந்து கொண்டி ருக்கிறது. இத்தகைய சூழலில் சாதி ஆணவ கொலைகளை தடுப்பதற்கு தனி சட்டம் இயற்ற வேண்டும் என்கிற கோரிக்கையை 3 பேரும் எடுத்துரைத்தோம்.

ஏற்கனவே ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது. இத்தகைய சட்ட தேவையை தேசிய பெண் கள் ஆணையம், உச்சநீதி மன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்பு கள், பல்வேறு சமூக செயல் பாட்டாளர்கள் வற்புறுத்தி இருக்கக் கூடிய நிலையில் தமிழ்நாடு அரசு சாதி ஆணவ படுகொலையை தடுக்க ஒரு தனி சட்டத்தை இயற்ற வேண்டும் என்ப தற்கான தேவையை முதல்–அமைச்சரிடம் எடுத்து ரைத்தோம். கோரிக்கை மனுவும் வைத்தோம். நாங்கள் சொன்ன விளக்கங்களை முதல்–அமைச்சர் கேட்டுக் கொண்டார். உரிய நடவ டிக்கை எடுப்பதாக தெரி வித்து உள்ளார். பொதுவாக சமூகத்தில் சாதிய மேலாதிக்க சக்திகள், சாதி வெறி சக்திகள், இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது இந்தியா முழுவதும் அதி கரித்து உள்ளது. தமிழ்நாட் டில் இப்போது அதிகமான சாதி ஆணவ படுகொலை நடக்கிறது.

ஆகவே வழக்கமான கொலை சட்டம் மூலமாக ஆணவ கொலையை தடுப் பது என்பது குற்றச் செய லில் ஈடுபடக் கூடிய அனை வரையும் உள்ளடக்கி யதாக அந்த சட்டம் இல்லை. எனவே சாதி ஆணவ கொலைகளில் சம்பந்தப் பட்ட அனைவரையும் உள் ளடக்கிட ஒரு ஒருங்கிணைந்த சட்டத்தை இயற்ற வேண்டும் என்பது எங்களது கோரிக்கை. அதை முதல்–அமைச்சரிடம் எடுத்து சொன்னோம். இவ்வாறு அவர் கூறினார்.

சப்–இன்ஸ்பெக்டர் கொலை:

போலீசாருக்கே பாதுகாப்பு இல்லை

எடப்பாடி பழனிசாமி எக்ஸ் வலைதளத்தில் பதிவு

சென்னை, ஆக.6–

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

எங்கே இருக்கிறது சட்டம் ஒழுங்கு? திருப்பூர் மாவட்டத்தில் குடும்பத் தகராறை விசாரிக்கச் சென்ற எஸ்.ஐ.சண்முகவேல் படுகொலை செய்யப்பட்டதாகவும், கோவை காவல் நிலையத்தில் எஸ்.ஐ. அறையில் ஒருவர் தூக்கிட்ட நிலையில் உயிரிழப்பு எனவும் செய்திகள் வருகின்றன. காவல் நிலையத்தில் கூட இல்லாத சட்டம் ஒழுங்கிற்கு என்ன பதில் வைத்துள்ளார் பொம்மை முதல்வர்?

விசாரிக்க செல்லும் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லை என்பதையும், காவல் நிலையத்திலேயே ஒருவர் தூக்கிட்டுக் கொள்ளும் அளவிற்கு அலட்சியமாக இருந்தது என்பதையும் எப்படி எடுத்துக் கொள்வது? மு.க. ஸ்டாலின் செய்யும் அத்தனை அரசியலும் இந்த சீர்கெட்ட சட்டம் ஒழுங்கைப் பற்றி யாரும் பேசக் கூடாது என்பதற்கான திசை திருப்புதல் தந்திரம் மட்டுமே!

ஆனால், மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்– அவர்களுக்கு தேவை பாதுகாப்பான தமிழகம்! மக்களைக் காக்க, தமிழகத்தை மீட்க ஒரே வழி, இந்த கையாலாகாத விடியா தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்புவதே! மேற்கூறிய வழக்குகளில் முறையான விசாரணை நடத்திடவும், குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஸ்டாலின் மாடல் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி

மாநில ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.547/2025/இ1 நாள்.04.08.2025

15வது நிதிக்குழு மானியம் (Health Grant) கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளுதல்:

1.அ.	மண்டலம்1 அனகாபுத்தூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி
ஆ.	மண்டலம்5 கிழக்கு தாம்பரம் புண்டி பழார் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி

15வது நிதிக்குழு மானியம் (Health Grant) கீழ் கீழ்கண்ட பணிகள் மறுஒப்பந்தப்புள்ளி கோருதல்:

இ	மண்டலம் 3ல் வார்டு 23 குளக்கரை தெரு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் கட்டும் பணி
ஈ	மண்டலம் 3ல் வார்டு எண்.41 செம்பாக்கம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் கட்டும் பணி

15வது நிதிக்குழு மானியம் 2024–25 Tied Grant எஞ்சி கீழ்கண்ட பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல்

உ.	Construction of 2.0 0 LL capacity OHT of 16m stage height with pump and pipeline distributions at Thiruneermalai Ward No.30 and 31 in zone 1

15வது நிதிக்குழு மானியம் 2025–26 Tied Grant எஞ்சி கீழ்கண்ட பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல்

ஊ	மண்டலம் 3ல் வார்டு எண்.22ல் மடிகுளூர் வடகால் அமைக்கும் பணி

பொது நிதி 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல்

எ	மாநகராட்சி மைய அலுவலகத்தில் மின்தூக்கி அமைக்கும்

பொது நிதி 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருதல்

ஏ	மண்டலம் 1 மற்றும் 5ல் மாநகராட்சி நடுநிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் Robotics Class செயல்படுத்துதல்

2. பணியின் குறைந்த பட்ச மதிப்பு ரூ.15.00 இலட்சம், அதிகபட்ச மதிப்பு ரூ.220.08இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 06.08.2025 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட (https://tntenders.gov.in) வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 22.08.2025 அன்று மாலை 3.00 மணி.
5. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் 22.08.2025 அன்று மாலை 3.30 மணி.
6. ஒப்பந்தப்புள்ளி கவுந்தாய முன்னோட்ட கூட்டம் 13.08.2025 காலை 11.00 மணிக்கு தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
7. பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவளித் தொகை, ஒப்பந்ததாருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/4162/ஒப்பந்தப்புள்ளி/2025

ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

பழநி நகர், பழநி வடம், திண்டுக்கல் மாவட்டம்.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு - ஒரு உறை முறை

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 01/2024-25 நாள் : 04.08.2025

ஒப்பந்த வகைப்பாடு / இனம் வளர்வான விலை விகிதம்

மேற்காணும் திருக்கோயில் இணை ஆணையர்/